
# ஏஜிங் ஐஸ்

முதுமை சார்ந்த மாக்குலர் டிஜெனரேஷன் (ஏஎம்டி)
நோயின் அறிகுறிகள், தடுப்பு முறை மற்றும் சிகிச்சை




## கண்

நமது உடலில் நமது கண் மிகவும் சிக்கலான உறுப்பு என்று குறிப்பிடப்படுகிறது.




கார்ணியா எனப்படும் திரை மூலம் ஒளி உள்ளே நுழைந்து கண்மணியின் திறப்பின் வழியாக கடக்கிறது மற்றும் பின்பு லென்ஸ்-ஐ சென்றடைகிறது. லென்ஸ் கண்ணின் பின்புறம் உள்ள உட்புற தசை சுவரான விழித்திரை மீது ஒளியை குவிக்கிறது.


## விழித்திரை




ரெடினா எனப்படும் விழித்திரையில் வரிசையாக ஒளியை உணரும் செல்கள் அல்லது ஃபோட்டோரிசப்டார்கள் எனப்படும் ராடுகள் மற்றும் கோன்கள் உள்ளன. விழித்திரையின் மத்தியில் மாக்குலா உள்ளது மற்றும் இதுவே கூரான மையப் பார்வைக்கு பொறுப்பாகிறது. மாக்குலாவில் உள்ள சிறிய அமுத்தமான ஃபோவியா மிக துல்லியமான பார்வையை அளிக்கிறது. ஒளி விழித்திரையை அடைந்ததும் ஃபோட்டோ ரிசப்டார்கள் மூளைக்கு பார்வை நரம்புடன் சமிக்ஞை துடிப்புகளை அனுப்புகின்றன. மூளை அதை பார்வையாக மாற்றுகிறது.

## முதுமை சார்ந்த மாக்குலர் டிஜெனரேஷன் (ஏஎம்டி) என்றால் என்ன?

வயதானவர்களில் பெரும்பாலானவர்களுக்கு உடலில் இயற்கையான முதுமை காரணமாக இந்த மாக்குலர் டிஜெனரேஷன் பாதிப்பு ஏற்படுகிறது. பலவிதமான மாக்குலர் பிரச்சினைகள் உண்டு. ஆனால் அவற்றில் மிக பொதுவானது முதுமை சார்ந்த மாக்குலர் டிஜெனரேஷன் (ஏஎம்டி).





மாக்குலர் டிஜெனரேஷன் கீழ்க்கண்டவை போன்ற பல காரணங்களால் ஏற்படுகிறது:

- விழித்திரையின் கீழ் ட்ரூசன் என அழைக்கப்படும் பொருள்கள் உருவாகுதல்.
- சிலருக்கு விழித்திரையின் கீழ் ஒழுங்கற்ற இரத்தக் குழாய்களின் வளர்ச்சி.


## வயது-சார்ந்த (ஏஜ்-ரிலேட்டட்) மேக்யுலர் டீஜெனரேஷன் எதனால் ஏற்படுகிறது?



60 அல்லது அதற்கு மேற்பட்ட வயது




புகைப்பிடித்தல்



மரபியல்



உயர் இரத்த அழுத்தம்



இதய நோய்



உடல் பருமன்




உயர் கொலஸ்ட்ரால்



ஆன்ட்டி-ஆக்ஸிடன்ட்
உட்கொள்ளுதல் குறைவு

# ஏஎம்டி வகைகள்

## உலர்ந்த ஏஎம்டி



ட்ரூஸன் உடனான நான்-நியோவாஸ்குலர் மேக்யுலர் டீஜெனரேஷன் என்றும் அழைக்கப்படுகிறது. மேக்யுலர் டீஜெனரேஷன் உள்ள பெரும்பாலானவர்களுக்கு இருப்பது உலர்ந்த வடிவம். மேக்யுலாவின் திசுக்கள் வயதடைவதால் மற்றும் மெலிந்து போவதால் இந்நிலை ஏற்படுகிறது.

## விட்ரெக்டொமி



இது நியோவாஸ்குலர் மாக்குலர் டிஜெனரேஷன் என்றும் அழைக்கப்படுகிறது. மாக்குலர் டிஜெனரேஷன் உள்ள நபர்களில் சுமார் 10 சதவிகிதத்தினருக்கு வெட் ஃபார்ம் உள்ளது. ஆனால் இது டிரை ஃபார்மை விட மைய அல்லது தெளிவான பார்வைக்கு அதிக சேதம் ஏற்படக் காரணம் ஆகலாம்.


விழித்திரையின் கீழ்: ஒழுங்கற்ற இரத்தக் குழாய்கள் வளர ஆரம்பிக்கும்போது வெட் மாக்குலர் டிஜெனரேஷன் ஏற்படுகிறது. இந்த இரத்தக் குழாய் வளர்ச்சி சோராய்டல் நியோவாஸ்குலரைசேஷன் (சிஎன்வி) என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்த இரத்த குழாய்கள் சோராய்ட் என்று அழைக்கப்படும் விழித்திரையின் கீழுள்ள படலத்திலிருந்து வளர்கின்றன. இந்த புதிய இரத்தக் குழாய்களில் இருந்து திரவம் அல்லது இரத்தம் கசியலாம். மங்கலான அல்லது பாதிப்பான மையப் பார்வை ஏற்படலாம்.

இந்த வகை மாக்குலர் டிஜெனரேஷன் பாதிப்பில் பார்வை இழப்பு வேகமாக இருக்கலாம் மற்றும் டிரை மாக்குலர் டிஜெனரேஷனை விட குறிப்பிடத் தக்க விதத்தில் விரைவாக ஏற்படலாம். வெட் மாக்குலர் டிஜெனரேஷன் அறிகுறிகள் வழக்கமாக தோன்றும் மற்றும் விரைவாக நிலை மோசமாகி விடும்.


## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்




மங்கிய பார்வை



மங்கிய நிறம்



தள்ளாடும் பார்வை




மத்திய பார்வையிழப்பு

## ஏஎம்டி-ஐ எவ்வாறு நிர்வகிப்பது?


### நோய் கண்டறிதல்:

### ஆம்ஸ்லர் கிரிட்




உங்களுக்கு ''மேக்யுலர் டீஜெனரேஷன்'' இருந்தால், நீங்களே சொந்தமாக ஆம்ஸ்லர் கிரிட் மூலம் பரிசோதித்துக் கொள்ளலாம். ஆனால், அது ஒரு ''முழுமையான'' பரிசோதனையல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள், மற்றும் ஆரம்பநிலை பார்வையிழப்பை அது கண்டறியாமல் போகலாம்.

### ஆப்டிகல் கொஹெரன்ஸ் டோமோக்ராஃபி (ஓசிடி)



இது, உயர் தெளிவு படங்களுடன் விழித்திரையின் துல்லியமான படத்தை வழங்கும் ஒரு நோய் கண்டறியும் யுத்தியாகும்.

### ஃபண்டஸ் ஃபுளூரஸீன் ஆஞ்ஜியோகிராஃபி (எஃப்எஃப்ஏ)



இது, கண்ணின் பின்பக்க நிலை பற்றி கூடுதல் தகவல் பெற மேற்கொள்ளப்படும் ஒரு பொதுவான செயல்முறையாகும். உங்கள் கையில் ஒரு ஊசி மூலம் டை செலுத்தப்பட்டு, அது உங்கள் விழித்திரை நரம்புகளுக்குச் சென்று ஏதேனும் அடைப்புகள் இருந்தால் அதைப் படம்பிடிக்க உதவுகிறது.


## சிகிச்சை:

### டிரை ஏஎம்டி:


மாக்குலர் டிஜெனரேஷனின் டிரை ஃபார்ம்-க்கு எந்தவித தனிப்பட்ட நிரூபணமான சிகிச்சையும் இல்லை. எனினும் ஒரு பெரிய விஞ்ஞானப்பூர்வ ஆய்வு ஆன்டிஆக்ஸிடன்ட் வைட்டமின்கள் மற்றும் துத்தநாகம், சில நபர்களுக்கு இது மிகவும் தீவிரமாகிவிடாமல் இதன் தீவிரத் தன்மையை குறைப்பதன் மூலம் மாக்குலர் டிஜெனரேஷனின் தாக்கத்தை குறைக்கலாம் என்று காட்டியுள்ளது.

### ஈரமான ஏஎம்டி

### விஈஜிஎஃப்-க்கு எதிரான ஊசி சிகிச்சை:



தற்போது, ஈரமான வயது-சார்ந்த மேக்யுலர் டீஜெனரேஷனுக்கான மிகப் பொதுவான மற்றும் செயல்திறன் மிக்க மருத்துவ சிகிச்சையாக விளங்குவது வி ஈ ஜி எஃப்-க்கு எதிரான சிகிச்சையாகும் - இது ''ஆன்ட்டி-வி ஈஜிஎஃப்'' என்ற மருந்தை இன்ட்ராவிட்ரியல் (கண்ணுக்குள் செலுத்தப்படும்) முறையில் ஊசி மூலம் செலுத்துவதாகும்.




### போட்டோடைனமிக் தெரபி (பிடிடி)

இந்த தெரபி மாக்குலாவின் மத்தியில் ஏற்படும் வெட் மாக்குலர் டிஜெனரேஷனுக்கு சிகிச்சை அளிக்க ஒரு போட்டோசென்சிடைசர் மற்றும் சிறப்பான லோ பவர் 'ல்லது கூல் லேசர் என்று அழைக்கப்படும் இலகுவான செயல்படும் மருந்தின் சேர்க்கையை பயன்படுத்துகிறது.

### லேசர் சிகிச்சை

ஈரமான ஏ ஆர் எம் டி-க்கான மற்றொரு சிகிச்சை, லேசர் ஃபோட்டோகோயாகுலேஷன். இந்த சிகிச்சை, கசிவைத் தடுக்க புதிய இரத்த குழாய்களை இறுக்கி மூட லேசர் வெளிச்சத்தைப் பயன்படுத்துகிறது.



### வழக்கமான பராமரிப்பு

ஏஎம்டியை தடுக்க அல்லது தீவிரமாவதை மெதுவாக்க உதவும் வழிகாட்டல்கள் இ

- தொடர்ந்து உடற்பயிற்சி செய்யுங்கள்
- மிகுதியாக பச்சைப் பசேலென்ற காய்கறிகள், பச்சை கீரைகள் போன்றவற்றை அதிகம் சாப்பிடுங்கள்
- உங்கள் இரத்த சர்க்கரை அளவு மற்றும் கொலஸ்ட்ரால் அளவை கட்டுப்பாட்டில் வையுங்கள்.
- வெளியே செல்லும்போது புற ஊதா கதிர்களை தடுக்க மற்றும் கண்களுக்கு சேதம் ஏற்படுத்தக் கூடிய நீல ஒளியை தடுக்க தகுந்த சன் கிளாஸ்கள் அணியுங்கள்.
- அனைத்துக்கும் மேலாக உங்கள் கண் ஆரோக்கியத்தை பராமரிக்க குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு முறை உங்கள் கண் டாக்டரிடம் காட்டுங்கள்.
- புகை பிடித்தல், மது குடிப்பதை தவிருங்கள். ஏனெனில் இவை உங்கள் பார்வையை பாதிக்கலாம்.










## விஈஜிஎஃப்-க்கு எதிரான ஊசி சிகிச்சை:

இது ஈரமான வயது-சார்ந்த மேக்யுலர் டிஜெனரேஷனுக்கு அனுமதியளிக்கப்பட்ட மருந்தாகும்.

## இது எவ்வாறு செயல்படுகிறது?





விழித்திரைக்கு பின்புறம் புதிய இரத்தக் குழாய்கள் உருவாவதை இது தடுக்கிறது, விழித்திரையில் கசிவு ஏற்படாமல் பராமரிக்கிறது, மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய பார்வையிழப்பு அபாயத்தை குறைக்கிறது.

மருந்தின் செயல்திறன் ஒரு மாதம் அல்லது அதற்கதிகமாகவும் நீடிக்கலாம், எனவே நீங்கள் பெறும் ஊசிகளின் எண்ணிக்கை, உங்கள் நிலைக்கேற்ப மற்றும் உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி இருக்கும்.

## நன்மைகள்

விஈஜிஎஃப்-க்கு எதிரான ஊசி உடனான சிகிச்சை, முக்கிய பார்வைத் தன்மைகளை (நிறம், ஒளிர்வு மற்றும் கூர்மைத்தன்மை) மற்றும் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், கார் ஓட்டுதல் போன்ற வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளை மேம்படுத்தலாம்.





**டிஸ்கிளெய்மர்:** இந்த் வெளியீடு தகவல் நோக்கத்திற்காக மட்டுமே. இது ஒரு மருத்துவர் அல்லது அரோக்கிய நல நிபுணரின் ஆலோசனை அல்லது அறிவுரைக்கு மாற்றாகாது. துல்லியமான மற்றும் சமயத்துக்கேற்ற தகவலை வழங்க நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம், ஆனால் இது தொடர்பாக எந்த உத்திரவாதமும் அளிக்கப்படாது. நீங்கள் உங்கள் கண் மருத்துவர் அல்லது ஆரோக்கிய நல நிபுணரின் ஆலோசனையைப் பெற்று அதன் படி நடக்க வேண்டும்.


INTAS

**INTAS PHARMACEUTICALS LIMITED**

Near Sola Bridge, S.G. Highway, Thaltej,
Ahmedabad – 380054, Gujarat, INDIA.
Website : www.intaspharma.com


**RAZUMAB™**
Ranibizumab 0.5 mg Injection


2122542 Tamil